# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.

**Prosecution:**PW.3

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| **Name** | கார்த்தீஸ்வரி | **D/o.** | இருளப்பன் |
|---|---|---|---|
| **Village** | வேலூார் ஒத்தவீடு | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.3 |
| **Date** | 09.11.2021 | **Age** | 25 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 09.11.2021.**

**முதல் விசாரணை:**

நான் வேலூார் ஒத்த வீடு கிராமத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். நான் தற்சமயம் கோயம்புத்துார் வாகரம்பாளையம் என்ற ஊரில் கௌசல்யா மில்லில் தங்கி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி பாண்டித்துரையை எனக்குத் தெரியும். அவர் என் அக்கா இராஜேஸ்வரியின் கணவர். சம்பவத்தில் கொலையுண்டு இறந்துபோன இராஜேஸ்வரி என் அக்கா. அதே சம்பவத்தில் கொலையுண்டு இறந்துபோன தனபாக்கியம் என் தாயார். அதே சம்பவத்தில் கொலையுண்டு இறந்துபோன ஆறுமுகம் என் அப்பத்தா ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் கொலையுண்டு இறந்துபோன இராஜேஸ்வரி மற்றும் என் தம்பி கண்ணன் ஆகியோர்கள் ஆவார்கள். சம்பவ சமயத்தில் என் தம்பி கண்ணன் திருப்பூரில் ஹரிகிருஷ்ணா மில்லில் வேலை செய்து வந்தார். எனது அக்கா இராஜேஸ்வரிக்கும், எதிரி பாண்டித்துரைக்கும் சம்பவத்திற்கு 1 ½ வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடைபெற்றது.

அவர்களுக்கு சம்பவ சமயத்தில் தென்பாண்டி என்ற 4 மாத ஆண்குழந்தை இருந்தது. திருமணம் நடைபெற்றதிலிருந்து என் சகோதரிக்கும், எதிரிக்கும் அடிக்கடி சண்டை நடைபெற்று வந்தது. என் அக்கா இராஜேஸ்வரி அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்துவிடும். நாங்கள் சமாதானப்படுத்தி அனுப்பி வைப்போம். எனது அக்காவுக்கும், எதிரிக்கும் சண்டை நடந்ததால் என் அக்கா மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தது. மேற்படி புகாரின் பேரில் எதிரியின் தாயார் ஈஸ்வரியையும், சகோதரி தவச்செல்வியையும் காவல் துறையினர் கைது செய்தார்கள். அதற்குப் பின்னீடு என் அக்கா எங்கள் வீட்டில் இருந்தது. நான் அப்போது கோயம்புத்தூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டேன். 04.01.2015-ம் தேதியன்று என் அப்பா இருளப்பன் என்னை பார்ப்பதற்காக கோயம்புத்தூர் வந்திருந்தார். கோயம்புத்தூர் வாகரம்பாளையம் மில் கம்பெனியில் பெற்றோர்கள் தங்குவதற்காக தனியாக விடுதி இருந்தது. அந்த விடுதியில் என் தகப்பனார் தங்கியிருந்தார். 06.01.2015-ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் வேலூர் ஒத்தவீடு கிராமத்தினைச் சேர்ந்த முனியாண்டி மகன் வீராச்சாமி என்பவர் என் தகப்பனாருக்கு போன் செய்தார். எனது அக்காவின் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்து குழந்தையைக் கேட்டு தகராறு செய்வதாக கூறினார். அப்போது என் அக்கா குழந்தையை தர மறுத்ததால் எதிரி பாண்டித்துரை தன் முதுகுக்கு பின்னால் இருந்த அருவாளை எடுத்து என் அக்காவை வெட்டியதாகவும், தடுக்க வந்த என் அம்மா தனபாக்கியத்தையும் எதிரி பாண்டித்துரை வெட்டியதாகவும், அப்போது பயந்து வீட்டிலிருந்து வந்த என் அப்பத்தா ஆறுமுகத்தையும் எதிரி பாண்டித்துரை வெட்டியதாகவும், அங்கு நின்று கொண்டிருந்தவர்களை உங்களையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டிவிட்டு குழந்தையை தூக்கிக் கொண்டு எதிரி

பாண்டித்துரை சென்றுவிட்டதாக வீராச்சாமி என் அப்பாவிடம் போனில் கூறினார். வெட்டுப்பட்ட 3 நபர்களும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் போனில் கூறினார். உடனே என் தகப்பனார் வீராச்சாமியை காவல் நிலையத்தில் புகார் செய்யச் சொன்னார். பின்னர் என் தகப்பனார் என்னை கூட்டிக்கொண்டு, திருப்பூர் சென்று அங்கு இருந்த என் தம்பியையும் கூட்டிக்கொண்டு அங்கிருந்து கிளம்பி மறுநாள் 07.01.2015-ம் தேதியன்று காலை 06.30 மணியளவில் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம். அங்கு பிணவறைக்கு சென்று 3 பேரின் உடல்களையும் பார்த்தோம். சடலக்கூறாய்வு முடிந்த பின்பு 3 நபர்களின் உடல்களையும் என் தந்தை வசம் ஒப்படைத்தனர். அதற்குப் பின்னீடு 3 பேரின் உடல்களை குலவழக்கப்படி நல்லடக்கம் செய்தோம். இந்த சம்பவம் தொடர்பாக வீராச்சாமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் விவரங்கள் கூறினேன்.

**<u>எதிரி தரப்பு கு.வி:</u>**

என் ஊரிலிருந்து பில்லூருக்கு 20 முதல் 25 கி.மீ இருக்கும். என் அக்கா இராஜேஸ்வரிக்கு திருமணம் செய்வதற்கு முன்பு எனக்கு திருமணம் முடிந்துவிட்டது என்றால் சரிதான். என் அக்கா திருமணத்திற்கு 8 மாதங்களுக்கு முன்பாகவே எனக்கு திருமணம் முடிந்துவிட்டது. நான் திருமணம் முடிந்தபின்பு என் கணவர் வீட்டில் தான் இருந்தேன் என்றால் திருமணம் முடிந்து 10 நாட்கள் மட்டுமே இருந்தேன். பிறகு என் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் திருமணம் முடிந்து பில்லூரில் தான் நிரந்தரமாக இருந்தேன் என்றும், மற்றபடி என் அம்மா வீட்டிற்கு வரப்போக இருந்தேன் என்றால் சரியல்ல. என் அக்காவிற்கு திருமணம் நடந்து

முடிந்த 3 நாட்களுக்கு பிறகு நான் கோயம்புத்தூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டேன். என்னுடன் என் ஊர்க்கார பெண் யாரும் மில் வேலைக்குச் சேரவில்லை. நான் மட்டும் தான் மில் வேலைக்குச் சென்று மில் குடியிருப்பில் தங்கியிருந்தேன். அந்த சமயத்தில் என் தந்தை கோயம்புத்தூரில் வேலை செய்து வந்தாரா என்றால் இல்லை. என் அப்பா நான் கோயம்புத்தூரில் வேலை செய்வதற்கு முன்பாகவே அவர் அங்கு புரோட்டா மாஸ்டராக ஒரு கடையில் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் தம்பி திருப்பூரில் என் அக்கா திருமணத்திற்கு முன்பிலிருந்தே வேலை செய்து வந்தார். எங்கள் ஊரில் நிரந்தர வேலை இல்லாத காரணத்தினால் தான் என் தம்பி திருப்பூருக்கு வேலைக்குச் சென்றார் என்றால் விவசாய வேலை தான் எங்கள் ஊரில் நடந்தது. மில்லுக்கு வேலைக்குச் செல்வதற்காக என் தம்பி திருப்பூருக்கு சென்றுவிட்டார். எங்கள் ஊரில் நிரந்தர வேலை இல்லாததினால் தான் என் அப்பா கோயம்புத்தூருக்கும், என் தம்பி திருப்பூருக்கும் வேலைக்குச் சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது என் தந்தை உள்பட அனைவரும் கோயம்புத்தூரில் தான் வேலை செய்து வருகிறோம். என் அக்கா இராஜேஸ்வரி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரி பாண்டித்துரையின் தாயார் மற்றும் அவரின் சகோதரி மீதும் கொடுத்த வழக்கில் இரு தரப்பினரும் சமாதானமாக போய்விட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் மறுபடியும் தகராறு நடந்து கொண்டு தான் இருந்தது. மேற்படி வழக்கில் இரு தரப்பினரும் சமாதானமாக போன பின்பு எந்தவித பிரச்சனையும் மீண்டும் இருதரப்பினருக்குமிடையே ஏற்படவில்லை என்றும், சமாதானமாக தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா எனக்குத் தெரிய வெளிநாட்டிலும் வேலை செய்தார் என்றால் சரிதான். எவ்வளவு வருடம் என் அப்பா

வெளிநாட்டில் வேலை செய்து வந்தார் என்றால் 1 வருடம் கூட இருக்காது. என் அப்பா வெளிநாட்டில் 5 வருடமாக வேலை செய்தார் என்றும், நான் இந்த வழக்கிற்காக மாற்றி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 04.01.2015-ம் தேதியன்று என் அப்பா என்னை பார்க்க வந்ததற்கு முக்கியமான காரணம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. என் அப்பா எப்போதுமே 2 மாதங்களுக்கு ஒரு முறை என்னை பார்க்க கோயம்புத்தூர் வருவார். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் என்னை தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். காவல் துறையினர் என்னை விசாரிக்கும் போது கோயம்புத்தூரில் உள்ள மில்லில் உள்ள பெற்றோர் குடியிருப்பில் என் அப்பா தங்கியிருந்த விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி விவரத்தினை நான் காவல் துறையினர் என்னை விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றும், தற்போது இவ்வழக்கிற்காக பொய்யாக என் அப்பா கோயம்புத்தூரில் மில்லின் விடுதியில் தங்கியிருந்தார் என்ற விவரத்தினை சொன்னேன் என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக எந்த மில்லிலும் பெற்றோர்கள் தங்குவதற்கு விடுதி இருக்காது என்றால் சரியல்ல. கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள வேலை செய்யும் நபர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மில் அனுமதியுடன் பகல் வேலையில் சந்தித்துவிட்டு திரும்பிவிடுவார்கள் என்றும், மில் குடியிருப்பில் பெற்றோர்கள் தங்க அனுமதியில்லை என்றும், நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பெற்றோர்கள் தங்குவதற்கு விடுதி இருந்தது. என் அப்பா கோயம்புத்தூரில் தான் நிரந்தரமாக தங்கி வேலை செய்து வந்தார் என்றும், இந்த விவரத்தினை மறைப்பதற்காகவே 04.01.2015-ம் தேதியன்று என்னை பார்க்க வந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால்

சரியல்ல. 06.01.2015-ம் தேதியன்று எனக்குத் தெரிய என் அப்பாவிற்கு வீராச்சாமி என்பவர் போன் எதுவும் பண்ணவில்லை என்றும், அவர் எந்த விவரமும் சொல்லவில்லை என்றும், என் தந்தை அவரிடம் காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் ஊர்காரர்கள் தான் என் அப்பாவிற்கு போன் செய்து அடையாளம் தெரியாத நபர்களால் என் சகோதரி, தாயார் மற்றும் அப்பத்தா ஆகியோர்கள் தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள் என்ற விவரத்தினை தெரிவித்தார்கள் என்றும், தற்போது நான் கேள்விப்படாத விவரத்தினை மாற்றிச் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் அக்காவின் திருமணத்திற்கு முன்பாகவே எனக்கு திருமணம் முடிந்து நான் என் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அதனால் என் அக்காவின் திருமண வாழ்க்கையில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்குத் தெரியும். எதிரி பாண்டித்துரை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் பழனி முருகன் கோவிலுக்கு போவதற்காக மாலை போட்டிருந்தார் என்றால் சரிதான். என் அக்கா சம்பவ சமயத்தில் எதிரி பாண்டித்துரையுடன் சண்டை போட்டுக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றும், குழந்தைபேறுக்காகத் தான் எங்கள் வீட்டிற்கு என் அக்கா வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. சண்டை போட்டுத் தான் வந்தார்.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.